# கலைஞர் இயக்கவியல்: எழுத்துக் கலைஞர்!

■ நீரை.மகேந்திரன்



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த நாட்களில், தமிழ்நாடு அரசு அறிவித்த எழுத்தாளர் கலைஞர் குழு சார்பில், முத்தமிழ் தேர் தமிழ்நாடு முழுவதும் வலம் வந்து கொண்டிருக்கிறது.

கலைஞரின் எழுத்துலகப் பயணங்களைப் பெருமைப்படுத்தும் அந்தத் தேர்ப் பயணம் தொடர்பாக சமீபத்தில், அந்தக் குழுவில் இடம் பெற்றுள்ள, சிந்துவெளி ஆய்வாளரும், ஓய்வுபெற்ற ஆட்சிப்பணி அதிகாரியுமான ஆர். பாலகிருஷ்ணன் அவர்களோடு ஒரு உரையாடல் நிகழ்ந்தது.

“உலக அளவில் கலைஞரைப் போல ஒரு எழுத்தாளர் முழுநேர அரசியல்வாதியாக இருந்ததைக் கவனிக்க முடியவில்லை. அல்லது ஒரு அரசியல்வாதி முழுநேர எழுத்தாளராகவும் இருக்கவில்லை” என்றார். அதை ஒப்புநோக்கும் வகையில், உலக அளவிலான பல தரவுகளையும் குறிப்பிட்டார்.

## முழுமையான அரசியல்வாதி, முழுமையான எழுத்தாளர்

வின்சன்ட் சர்ச்சில், பெட்ரண்ட் ரஸ்ஸல் என பல அரசியல்வாதி எழுத்தாளர்கள் தொடர்ச்சியாக இயங்கியவர்கள் இல்லை. கம்யூனிச தத்துவத்தை உலகுக்கு அளித்த மாமேதை கார்ல் மார்க்ஸ், அந்தத் தத்துவத்தை ருஷ்யாவில் அதிகாரத்துக்குக் கொண்டு வந்த ருஷ்யப் புரட்சி நாயகன் விளாதிமிர் லெனின் ஆகியோருக்குப் பின்னர், முழுமையான அரசியல்வாதியாகவும், முழுமையான எழுத்தாளராகவும் விளங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

சமூக ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த இந்திய சூழலில், தவிர நமது ஜனநாயக அமைப்பு முறையில் அரசியல்வாதியாக, ஆட்சி அதிகார நிர்வாகியாகச் செயல்பட்டுக்கொண்டே எழுத்துப் பணியையும் தொடர் செயல்பாடாகக் கொண்டிருந்தவர் கலைஞர் மட்டுமே. பண்டித ஜவஹர்லால் நேரு, மகாத்மா காந்தி ஆகியோர் அரசியல் செயல்பாடுகளைக் கொண்டிருந்தாலும் தொடர்ச்சியாக, தீவிரமாக எழுதியவர்கள் இல்லை.

திராவிடப் பேராசான்கள் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் தொடர்ச்சியாகப் பேசியவை, எழுதியவை இருந்தாலும் கலை, இலக்கிய, திரைத்துறைச் செயல்களில் கலைஞரின் பங்கு தனித்துத் தெரியக்கூடியது. அவரது பேனா அந்தக் கலையில் புதியவற்றைத் தொட்டுள்ளது.

## ஒப்புவமை இல்லாத பயணம்!

கலைஞருக்குப் பிறகான சூழலிலும் அரசியல்வாதிகளாக உள்ளோர் எழுத்துப் பணி என்பது பகுதிநேர அல்லது பத்தி எழுதுபவர்கள் என்கிற அளவிலேயே உள்ளனர். இந்த அளவீடுகள் படி காங்கிரஸ் மூத்த தலைவர்கள் ப.சிதம்பரம், சசி தரூர் ஆகியோர் எழுத்துக்களைக் கவனிக்கலாம்.

இந்த அளவுகள் எதுவுமே கலைஞரோடு பொருத்த முடியாத நிலையைப் பார்க்கலாம். நான் சொல்வது காலச் சூழலோடு மட்டுமல்ல, வயது, அனுபவங்கள் மட்டுமல்ல. கள அனுபவங்களுடன், கலை இலக்கியச் செயல்பாடுகளுடன் அரசியல் நோக்கிலான எழுத்துகளை, கலைஞரிடம் எல்லை வரையறைகள் இல்லாமல் நீள்வதைப் பார்க்கலாம்.

கலைஞர் தனது இளமைக் காலத்தில் இருந்தே எழுதிய வேகம், சினிமா எழுத்துகளில் உச்சம் கொண்டிருந்த நேரத்தில் எழுதியவற்றை அவர் எழுத்து காலத்தின் முதற்பாகமாகக் கொண்டால், இரண்டாவது ஆட்சி காலத்துப் பிறகும் மூன்றாவது ஆட்சி காலத்துக்குமான இடையில் கிடைத்த



காலத்தில் எழுதியவை, அவரது எழுத்துலகின் இரண்டாம் பாகமாகக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் எழுதியவை மூன்றாம் பாகமெனக் கொள்ளக்கூடியவை.

அதாவது, 1977-ஆம் ஆண்டுக்கும் 1989-ஆம் ஆண்டுக்கும் இடையிலான காலத்தில் அவரை இயக்கியவை கழகச் செயல்பாடுகள் மட்டுமல்ல, கலை இலக்கியச் செயல்பாடுகளும்தான். குறிப்பாக கலைஞர் இயக்கவியல் என்கிற கடந்த இரண்டு கட்டுரைகள் பேசிய காலத்தில், அவர் எழுதியவையும் அதிகம்.

## நேரத்தைக் கையாண்ட நிதானம்!

“1976-ஆம் ஆண்டு, தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட பின்னர், எதிர்க்கட்சியாகப் பணியாற்றிய நிலையில் ஓய்வான நேரத்தில் திரைப்படத் துறையிலும் மீண்டும் சற்றுக் கவனம் செலுத்திட நேரம் கிடைத்தது” எனத் திரைப்படத் துறை தொடர்பான குறிப்பு ஒன்றில் குறிப்பிடுகிறார்.

கலைஞர் தனது காலத்தை எவ்வளவு நிதானமாக எதிர் கொண்டார் என்பதற்கு மிகப் பொருத்தமான உதாரணமாக **‘கலைஞரின் கவிதைகள்’** தொகுப்பினைக் குறிப்பிடலாம். 1976-ஆம் ஆண்டு நெருக்கடியை சந்தித்து, 1977-ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்த நிலையில், ஒரு படைத்தலைவன் இழப்புகளுக்குப் பின்னர், தவறுகளை ஆய்வு செய்யக்கூடிய அந்தக் கணத்தில், கலைஞரோ

**அவர் தனிப்பட்ட முறையில் இயங்கியது மட்டுமல்ல, கலை இலக்கிய ரீதியான பண்பாட்டு அசைவுகளையும் தமிழ்நாட்டில் உருவாக்கியதில் குறிப்பிடத்தக்க பாகம் வகிக்கிறார்.**

‘கலைஞரின் கவிதைகள்’ தொகுப்பினைக் கொண்டு வந்துள்ளார். 1977-ஆம் ஆண்டுப் பாரதி பதிப்பகம் கலைஞரின் கவிதைகள் தொகுப்பினைக் கொண்டு வந்துள்ளது.

## இயங்கிக் கொண்டிருந்த பேனா!

அந்த 13 ஆண்டு காலத்தில் ‘வண்டிக்காரன் மகன், ‘நெஞ்சுக்கு நீதி, ‘காலம் பதில் சொல்லும், ‘மாடி வீட்டு ஏழை, ‘தூக்கு மேடை, ‘பாலைவன ரோஜாக்கள், ‘பாடாத தேனீக்கள், ‘தென்றல் சுடும், ‘நியாயத்தராசு, ‘பொறுத்தது போதும், ‘பாச மழை, ‘காவலுக்குக் கெட்டிக்காரன், ‘வீரன் வேலுத்தம்பி எனப் பல திரைப்படங்கள் தொடர்ச்சியாக, அவர் எழுத்துக்களில் வந்துள்ளன

இந்தக் காலகட்டத்தில் முரசொலியில் தொடர்ச்சியாக உடன்பிறப்புக் கடிதங்கள் எழுதுகிறார். 1980-ஆம் ஆண்டிலிருந்து 1989-ஆம் ஆண்டு வரையில் மாதத்துக்குச் சராசரியாக 10 கடிதங்கள் எழுதியுள்ளார்.

1978-ஆம் ஆண்டு அரும்பு, வான்கோழி, பரதாயணம், 1979-இல் ஒரு மரம் பூத்தது, புனித ராஜ்ஜியம், நரன் மணிமாலை, 1981-இல் பேசும் கலை வளர்ப்போம், 1982-ஆம் ஆண்டு முடியாத தொடர்கதை, வைரமணிகள், 1983 -இல் தென்பாண்டிச் சிங்கம், 1985 -இல் இந்தியா? இந்தியாவா?, 1987-இல் சங்கத்தமிழ்,1988-இல் பொன்னர் சங்கர் எனத் தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருக்கிறார். அதற்கிடையே நெஞ்சுக்கு நீதி உள்ளிட்ட தொடர்கள்.

இந்தக் காலத்தில் இலக்கிய நிகழ்வுகளும், இலக்கிய மேடைகளும் மிக அதிக அளவில் கலந்து கொண்டிருக்கிறார். சற்றேறக்குறைய கவியரங்க நிகழ்வுகள் உச்சம் பெற்ற காலம் என அவற்றைச் சொல்லலாம். அதாவது அவர் தனிப்பட்ட முறையில் இயங்கியது மட்டுமல்ல, கலை இலக்கிய ரீதியான பண்பாட்டு அசைவுகளையும் தமிழ்நாட்டில் உருவாக்கியதில் குறிப்பிடத்தக்க பாகம் வகிக்கிறார்.

சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்கள், உள்ளாட்சித் தேர்தல்கள், கழகத்தின் முப்பெரும் விழாக்கள், மாநாடுகள், மக்கள் பிரச்சினைகளுக்கான போராட்டங்கள், சிறை, கொள்கைப் பயணங்கள், தொண்டர்களின் சந்திப்புகள் என ஒவ்வொரு நாளும் தொடர் செயல்பாடுகளினூடே அவரது பேனாவும் சகப் பயணியாக இயங்கிக் கொண்டே இருந்துள்ளது.

## ஓய்வே எடுக்காத உழைப்பு

“ஓய்வெடுத்துக் கொள்க” என்று சில நண்பர்கள் கூறினர். ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான் என்று என் கல்லறையின் மீதுதான் எழுதப்படும்” என்று பதில் சொன்னேன்” என 1985-ஆம் ஆண்டு ‘நெஞ்சுக்கு நீதி’ என்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார். கலைஞரின் அந்தக் கூற்றுதான், அவரை இன்னும் நூறு ஆண்டுகளுக்கும் ஒரு இயக்கத்தை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கான சான்றாக நாம் பார்க்க முடியும். ஆனால் ஒன்று, “இதோ ஓய்வு கொண்டிருக்கிறான் என, என் கல்லறையின் மீதுதான் எழுதப்படும்” என்று கலைஞரே குறிப்பிட்டிருந்தாலும், அவர் இன்னமும் ஓய்வெடுக்கவில்லை, இயங்கிக் கொண்டேதான் இருக்கிறார். அவரைப் பற்றி எழுதுவதற்கும், பேசுவதற்கும், கொண்டாடுவதற்கும், கொள்கைப் பாய்ச்சல் நிகழ்த்துவதற்கும் அவரது இயக்கமே நமக்குக் கைகொடுக்கும்.

## திராவிட இயக்க இதழ்கள் - ‘கிளர்ச்சி’




“திராவிட இயக்க வரலாற்றிலே ‘கிளர்ச்சி’யையும் அதன் ஆசிரியர் தோழர் தங்கப்பழம் அவர்களையும் எளிதில் மறந்துவிட முடியாது. வீண் வம்பும், வீராப்பும் செய்து இயக்கத்துடன் மோதிய மாற்றுக் கட்சி இதழ்கள், அவர் தொடுத்தக் கணையினால் கருகிய செய்தி மறக்கக் கூடியது அல்ல.

தூத்துக்குடி சதி வழக்கினால், சென்ற 317 நாட்களாக சிறையினுள் தள்ளப்பட்டு ஜாமீனில் வெளி வந்திருக்கும் ஆசிரியரின் நேர் பார்வையில் 15/8/54 முதல், அதிகப் பக்கங்களுடன் புதுமைக் கருத்துக்கள், கிண்டல் சித்திரங்களோடு வெளி வருகிறது.”

இப்படி ஒரு விளம்பரம் 20/8/54 தேதியிட்ட ‘முரசொலி’ வார இதழில் வெளிவந்துள்ளது. மேற்கூறிய சிறப்புகளுக்குரிய ‘கிளர்ச்சி’, அன்றைய திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி நகரிலிருந்து திராவிடர் இயக்க வார இதழாக வெளிவந்து, பிறகு மாதம் இருமுறை இதழானது. இதன் ஆசிரியர்களாக இராசு.தங்கப்பழம், எம்.எஸ். சிவசாமி என்ற இரட்டையர்கள் இருந்தனர்.

‘விபூதி வீரமுத்து’ என்பவர் நடத்திய ‘அறப்போர்’ என்ற காங்கிரஸ் பத்திரிகைக்கு, ‘கிளர்ச்சி’ இதழ் இரட்டையர்கள் காரசாரமாகப் பதில் எழுதியதாக, ‘இதழியல் கலை: அன்றும் இன்றும்’ நூல் குறிப்பிடுகிறது.

## :.ப்ளாஷ்பேக்



### தொண்டர் இல்லத்தில் உணவு!

தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் 1992-ஆம் ஆண்டு நடந்த பொதுக்கூட்டத்துக்கு அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய தமிழ்நாடு முதலமைச்சருமான தலைவர் தளபதி அவர்கள் வருகை தந்தார். காலையில் பொதுக் கூட்டங்களை எல்லாம் முடித்துக் கொண்டு மாலை வேளையில், எங்களது இல்லத்தில் உணவருந்திய போது இந்தப் படம் எடுக்கப்பட்டது. அப்போது நகர இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த எனது தந்தை க.சாகுல் அவர்கள் இந்த நிகழ்வைப் பல தருணங்களில் எங்களிடம் பெருமை பொங்கக் கூறியுள்ளார்.



முகமது பாசில் ஷாகுல்

**-முகமது பாசில் ஷாகுல், போடி நகரம்.**


இது போன்ற அரிய புகைப்படங் களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### இளைஞர் அணி உதயம்!

**1980 - ஆம் ஆண்டு ஜூலை மாதம் இருபதாம் தேதி மதுரை ஜான்சி ராணி பூங்கா திடலில் கழகத்தின் இளைஞர் அணி தொடக்க விழா நடைபெற்றது. அதைத் தொடர்ந்து, 1982-ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற இரண்டாம் ஆண்டு விழாவில், இளைஞர் அணியின் மாநில அமைப்பாளராக, இன்றைய கழகத் தலைவரை அறிவித்தார் கலைஞர் .**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 306




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.